ISSN:2582-9599
பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# பிசிராந்தையார் நாடகத்தில் துணைப்பாத்திரங்கள்

**முனைவர் ஜெ. ஜெயசாந்தி**
**இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி, சென்னை. jeyasha7@gmail.com**

71

**ஆய்வுச் சுருக்கம்**

கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையாரின் உயிரை விட மேலான நட்பின் மேன்மையை வெளிப்படுத்தும் நாடக நூல் பிசிராந்தையார் நாடகம் ஆகும். நாடகத்தின் நிலைத்த பெருமைக்கு அடிப்படையானது பாத்திரப் படைப்பே. இது நாடகத்திற்கு உயிர் போன்றது. நாடகம், பாத்திரங்களின் பண்புநலன்களையும் மனித இயல்புகளையும் வெளிப்படுத்த வல்லன.

இந்நாடகத்தில் பாத்திரங்கள் குறிப்பாக துணைப் பாத்திரங்கள் நல்லவர்களாவும் வல்லவர்களாகவும் உள்ளனர். தீயவர்களாகவும் சிலர் படைக்கப்பட்டுள்ளனர். தீயவர்கள் பின்னர் நல்லவர்களாகவும் மாறியுள்ளனர். இவர்களிடையே நடைபெறும் உரையாடல் நாடகத்தை வளர்ச்சியடைய செய்திருக்கிறது.

**திறவுச் சொற்கள்**

பிசிராந்தையார், துணைப்பாத்திரங்கள், நல்லவர்கள், தீயவர்கள், நாடகக் கதைப் போக்குக்குத் துணை, நல்வராக மாறுதல், நகைச்சுவையுணர்வு, நட்பு

**முன்னுரை**

நாடகத் தமிழ் இயலையும் இசையையும் இணைத்துக் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளிப்பதாகும். பாவேந்தர் பாரதிதாசன் இளமையிலேயே இயல், இசை, நாடகத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். அவருடைய மொழியறிவும் இசையுணர்வும் கவிதைகளாக வெளிப்பட்டன. நாடகங்களாக மிளிர்கின்றன. அவருடைய படைப்புக்களில் ஒன்று பிசிராந்தையார் நாடகம் ஆகும். இந்நாடகத்தில் இடம்பெற்றுள்ள துணைப் பாத்திரங்கள் குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

**நாடகத்தில் பாத்திரங்கள்**

நாடகத்தின் நிலைத்த பெருமைக்கு அடிப்படையானது பாத்திரப் படைப்பே என்பார் டாக்டர் ந. பிச்சமுத்து (திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும், ப.304) பாத்திரப் படைப்பு கதை மாந்தரின் மனநிலைக்கு ஏற்றாறு அமைவதாகும். இன்பம், துன்பம், வெறுப்பு, உற்சாகம், கோபம் போன்ற உணர்ச்சிகள் கதை மாந்தரின் உள்ளத்தில் மேலோங்கி நிற்கும் பொழுது அவர் பேசும் வார்த்தைகள் துடிப்புடன் வெளிவருகின்றன. “கதைக்கோப்புக்குப் பொருளையும் சிறப்பையும் உயிரோட்டத்தையும் கொடுப்பது பாத்திரம்” என்பார் பா. சம்பத் குமார் (மு. வ. நாவல்களில் பாத்திரங்கள் – ஒரு திறனாய்வு, ப. 6). “பாத்திரம் கதைப்பின்னலை உருவாக்குகிறது. கதைப்பின்னல் பாத்திரத்தின் விளைவாகவும் அதனைச் சார்ந்ததாகவுமே அமைகிறது” என்பார் பு. பிரகாசம் (தமிழ்வாணன் நாவல்களில் பாத்திரப்படைப்பு, ப.3). சிறந்த பாத்திரப் படைப்பு, உண்மையில் நாடகத்தின் உயர்வினை மிகுவிப்பத்தற்குரிய அடிப்படையான நிலைத்த நாடகக் கூறாகும் என்பார் தா. ஏ. ஞானமூர்த்தி (இலக்கியத் திறனாய்வியல், ப. 278).

**துணைப் பாத்திரங்கள்**

நாடகத்தில் துணைப் பாத்திரங்கள் மிக இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளன. அப்பாத்திரங்கள் இல்லையெனில் கதைக்கரு முழுமை பெறமுடியாது. தலைமைப் பாத்திரங்களுக்குத் தலைமைச் சிறப்பு தருவன துணைப் பாத்திரங்கள் ஆகும். சமுதாயத்தின் பல்வேறு தரப்பட்ட பகுதிகளின் சார்பாளர்களை வெளிக் கொணர்ந்து மனித இனத்தின் பல்வேறு பண்புகளை வெளியாக்கும் வல்லமை துணைப் பாத்திரங்களுக்கு உண்டு. படிப்போர்க்குப் பல்வேறுபட்ட உணர்வுகளை அவை ஊட்டுகின்றன என்பார் ஜெ. ஜெயசாந்தி (ஆய்வு நோக்கில் திருதொண்டர் காப்பியம், ஆய்வேடு, ப. 125).

பாரதிதாசனின் பிசிராந்தையார் நாடகத்தில், தலைமைப் பாத்திரங்களாகக் குறிப்பிடத்தக்கவர்கள் பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழன், பாண்டியன் அறிவுடை நம்பி ஆகியோரே எனலாம். இவர்கள் நல்லவர்களாவும் திகழ்கின்றனர். வல்லவர்களாகவும் திகழ்கின்றனர். மற்ற பாத்திரங்கள் அவ்வளவு சிறப்புக்குரியர் அல்லர் என்றாலும் நாடகக் கதைக்கும் போக்குக்கும் பெரிதும் துணை செய்கின்றனர். அவர்களில் சிலர் நல்லவராக மட்டும் உள்ளனர். சிலர் தீமை செய்வதில் வல்லவராக மட்டும் உள்ளனர். சிலர் தீயவர்களாக இருந்து நல்லவர்களாகவும் மாறி உள்ளனர். அவர்களைப் பற்றி இக்கட்டுரை விவரிக்கிறது.

**மேற்படியார்**

இவர் பிசிராந்தையார்க்கும் பாண்டியனுக்கும் நண்பர். அவர்களுடன் இவரும் நாடகத்தில் நற்பங்கு கொள்கிறார். இவர் தம் வறுமையைப் பிசிராந்தையாரிடம் நகைச்சுவையுடன் கூறுகிறார். மனைவி பணம் தரும்படி கேட்டாளாம். வரும்படி இல்லாததால் அவளைத் தாய் வீட்டிற்குத் திரும்படி என்று சொல்லிவிட்டு வந்து விட்டாராம். பெரும்படி அவள் வருந்தினாளாம். இவரிடம் வரும்படி இல்லாததால் பிசிராந்தையாரிடம் வரும்படி நேர்ந்ததாம். இவ்வகையில் வேண்டுமென்றே நகைச்சுவை ததும்பப் பொய் கூறிப் பிசிராந்தையாரிடம் பரிசில் பெற்றுச் செல்கிறார். பிசிராந்தையார் கொடையுள்ளம் கொண்டவர் என்பதை நிலைநாட்டினார். பிறகு இவர் காற்றும் மழையும் வீசியபோது வெளியில் சென்று மரத்தின் கீழ்ச் சிக்கிக் கொள்கின்றார். அங்கு வந்த பிசிராந்தையாரிடமும் அரசரிடமும் "காற்றில் ஆலமரம் என்னை இழுத்தது. விட்டு விட்டேன். வேலமரம் வரவேற்றது. உடம்பில் செங்குருதி குளிப்பாட்டியது. ஆலும் வேலும் மேலே கிளம்பின. ஏறி வந்த யானையையும் தூக்கிக் கொண்டு தான்" என்று துன்பத்திற்கிடையிலும் நகைச்சுவையாகப் பேசும் திறன் அமைந்தவர் இவர்.

**புல்லாற்றூர் எயிற்றியனார்**

இவர் கோப்பெருஞ்சோழனின் நண்பர்களில் ஒருவர். கோப்பெருஞ்சோழன் தன் மக்கள் போர் மேல் கொண்டு ஆட்சியைப் பற்ற வந்தபோது சோழன் மனைவி சொல்லியதையும் கேளாமல் மக்களை வென்று கொல்ல எண்ணினான். அப்பொழுது இப்புலவர் சோழனிடம், “உன்னை எதிர்ப்பவர் உன் பகைவரல்லர். அவர்களுக்கு நீயும் பகைவனல்ல. உனக்குப் பிறகு இந்நாடு அவர்க்கே உரியது. அவர்கள் தோற்றால் உன்னாடு யார்க்கு உரிமையாகும். நீ அவர்க்குத் தோற்றாலும் உன்னைத் தான் பகைவர் இகழுவர். அதனால் உன் செயலைத் தவிர்த்து, அவ்வுலகத்திற்கு வேண்டிய அறஞ்செய்க” என்று கூறினார். அவனும் போரைத் தவிர்த்து வடக்கிருக்கும் செயலில் ஈடுபட்டான். இவர் சொல்லுக்குச் சோழன் பெருமதிப்பு வைத்திருந்தான் என்று தெரிகிறது.

**பொத்தியார்**

கோப்பெருஞ்சோழனிடம் அளவு கடந்த நட்பும் அன்பும் கொண்டவர். அவன் வடக்கிருந்த போது தானும் வடக்கிருக்கத் துணிந்தவர். அரசன் பிசிராந்தையார் வருவார் என்று கூறியதற்கேற்ப வந்தவுடன் மிகவும் வியந்து பாராட்டுகிறார். சோழன் தனக்குரிய சிறப்புக்களை எல்லாம் மறந்து வடக்கிருக்கத் துணிந்தமை வியப்பிற்குரியது.

வேற்றரசனால் காக்கப்பட்டும், புகழே பெரிதென எண்ணியும் இந்தப் பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனின் துன்ப நேரத்தில் இவ்விடத்துக்கு வந்தது வியப்பினும் வியப்பே. பிசிராந்தையார் வருவார் என்று துணிந்து கூறிய வேந்தனின் மேன்மையும், அவ்வாறு வேந்தன் கூறியது பழுதுபடாமல் வந்த பிசிராந்தையாரின் அறிவும் வியக்குந்தோறும் அவ்வியப்பு வளர்கின்றது" என்கிறார். பின்னர் வடக்கிருந்து அவர்களுடன் உயிர் துறந்தார்.

**பாண்டிய அரசி**

இவள் பாண்டியனிடம் தணியாத காதலும், நீங்காத அன்பும் கொண்டவள். அரசன் காற்றும் மழையும் அதிகமாக வந்த போது, மக்கள் நிலையை அறிய வெளியில் புறப்பட்டான். அப்போது அவள் அரசன் துன்பத்துக்காக வருந்துகிறாள். அவன் வருகைக்காக வழிமேல் விழிவைத்து நோக்குகிறாள். பிசிராந்தையார் இவள் உள்ளத்தின் மென்மையை எண்ணிப் பெரிய துன்பத்தைத் தாங்காது என்ற நிலையில் "சிலந்திவலை மலையைத் தாங்குமா " என்கிறார். ஆயினும் நாட்டு மக்களின் துன்பத்தை நீக்க உறுதுணையாக இருந்தவள்.

**ஓடைப்பூ**

இவள் மீனவள். உடையப்பனின் மனைவி. மூன்று முறை வலை வீசப்போவதாகவும், அப்படியும் மீன் கிடைக்கவில்லை என்றால் உயிர் விடப் போவதாகவும் உடையப்பன் கூறியபோது, ஓடைப்பூ கலங்கிவிடுகிறாள். "வலையில் வந்து சேரவேண்டும். வாழும்படி செய்ய வேண்டும் மீன்களே! என்னை வாழும்படி செய்ய வேண்டும் மீன்களே!" **(பிசிராந்தையார், ப. 14)** என்று அவள் உருகிப் பாடும் பாட்டு கேட்போரின் நெஞ்சை உருக்கிவிடுகிறது. பின்னர் அவள் வலையில் சிக்கிய பெட்டியை எடுக்கக் கணவனுக்குத் துணை செய்கிறாள்.

**பச்சைக்கிளி**

நாடகத்துள் நாடகம் வரும்போது இவளைப் பற்றி அறிய முடிகிறது. இவள் கள்ளமற்ற உள்ளமும் குறைவற்ற அழகும் படைத்தவள். மான் வளவன் இவளைக் காதலித்து மணந்து கொண்டான். இவளின் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமல் ஒருதலைக் காதல் கொண்ட சோழநாட்டுத் தூயவன், வஞ்சனைச் சொல்லால் மான்வளவனின் உள்ளத்தை மாற்றுகிறான். மான் வளவன் உண்மையை உணராமல் அவளைக் குத்தி கொலை செய்து விடுகிறான். கத்தி வயிற்றில் பாயும்போது கருவுற்ற அவளின் உள்ளம் குழந்தையின் மீது கத்திபடுமே என்று வருந்துவதாகக் காட்டியிருப்பது அவளின் தாயன்பையும் அவலச்சுவையையும் எடுத்துரைக்கிறது. இவளின் கொலைக் தொடர்பான வழக்கு நாடகத்தில் பெரும் பங்கை ஏற்றுள்ளது.

**மணியிடை**

இவள் படைத்தலைவர் பரூஉத்தலையாரின் மகள். இளங்கோச் சோழனின் காதலி. இவனிடம் பெருங்காதலும் பேரன்பும் கொண்ட மணியிடை எத்தகைய துன்பம் வந்தாலும் தாங்கும் நிலையில் இருக்கின்றாள். காதலுக்காக உயிர் விடவும் தயங்காதவள். காதலன் புறப்படு என்று சொன்னதும்

புறப்படுகிறாள். எப்படியாவது பட்டத்து அரசியாக மாறிவிட வேண்டுமென்பது இவள் எண்ணம். தன்காதலன் பட்டம் பெற, தன் தந்தையிடம் உதவி வேண்டுகிறாள். அவனும் இவள் மேல் வைத்துள்ள பாசத்திற்குக் கட்டுப்பட்டு அரசனை எதிர்க்கும் நிலையில் மாறிவிடுகிறான்.

**சோழமன்னி**

இவள் கோப்பெருஞ்சோழனின் மனைவி. சோழனிடத்தும் மக்களிடத்தும் மிகுதியான அன்பு வைத்துள்ளவள். பிள்ளைகள், தந்தை மீதே போர்த் தொடுத்தபோது அவள் கலங்குகிறாள். அவர்கள் மேல் அரசன் போரிடாமல் இருக்க வேண்டுகிறாள். புல்லாற்றூர் எயிற்றியனாரும் அரசியின் கருத்துக்கு ஆதரவு தருவது போல் அறம் உரைக்கின்றார். அரசன் போரிடுவதை நிறுத்தி வடக்கிருத்தலை மேற்கொள்ளும் போது துடிதுடிக்கின்றாள். இவளை எண்ணும்போது பற்றும் பாசமும் பக்தியும் கொண்ட அரசியே மனக்கண்ணில் தோன்றுகிறாள். இருதலைக் கொள்ளி எறும்பு போல் அவள் படும்பாடு அவள் வேதனையை மேலும் மிகுதிப்படுத்துகிறது.

பிசிராந்தையார் நாடகத்தில் புலவர்கள், பெண்களைப் போன்றே, தீயவர் சிலரும் இந்நாடகத்தில் வருகின்றனர். நாடகக் கதையையும் நடத்திச் செல்கின்றனர். இவர்களில் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர் இளங்கோச் சோழன், அவன் தம்பி, படைத்தலைவர் பரூஉத்தலையார், சோழநாட்டைச் சேர்ந்த தூயவன், மான் வளவன் ஆகியோரைக் கூறலாம்.

**மான் வளவன்**

இவன் பாண்டிய நாட்டுப் பச்சைக் கிளியின் கணவன். மான் போன்று ஆடுவதிலும் இசையுடன் பாடுவதிலும் சிறந்தவன். பச்சைக் கிளியைக் காதலால் மணம் முடித்தவன். மனைவி கருவுற்ற போது அவள் கேட்டதை வாங்கித் தர எண்ணியவன். சோழ நாட்டுத் தூயவன் வஞ்சனைப் பேச்சை நம்பி, அவளைக் கொலை செய்தவன். பின்னர் மனம் வருந்தித் திருந்தியதால் அரசரால் மன்னிக்கப்பட்டவன்.

**தூயவன்**

இவன் சோழநாட்டிலிருந்து பாண்டிய நாட்டுக்கு வழிப் பயணமாகி வந்தபோது கரடியிடமிருந்து பச்சைக்கிளியைக் காப்பாற்றியவன். அவள் விரும்புகிறாளா என்பதை அறியாமலேயே அவளை நெஞ்சில் நிறுத்தியவன். அழகும், கலையுணர்வும் இல்லாத காரணத்தினால் தாழ்வுணர்ச்சியால் உந்தப்பட்டு நண்பர்கள் சொல்வதற்கேற்ப கோமாளித்தனமாக நடப்பவன். மான்வளவன் பச்சைக் கிளியை மணந்ததை அறிந்ததும் அவளிடம் வஞ்சனைச் சொல் கூறி அவள் கொலை செய்யப்படுவதற்குக் காரணமாக இருந்தவன். இறுதியில் மனம் உணர்ந்து திருந்தியதால் அரசரால் மன்னிக்கப்பட்டவன்.

**இளங்கோச் சோழனும் அவன் தம்பியும்**

இவர்கள் கோப்பெருஞ் சோழனுக்கு எதிராகவே புரட்சி செய்வதால் அரசன் வடக்கிருக்கும் நிலை ஏற்படுகிறது. இளங்கோச் சோழன் தந்தை மீது தவறான குற்றச்சாட்டுக்களைக் கூறுவதிலும், போர் மூலமாவது நாட்டைப் பிடிக்க வேண்டும் என்பதிலும் ஆர்வம் கொண்டவனாகத் திகழ்கிறான். படைத் தலைவன் மகள் மணியிடையைக் கைப்பிடிப்பதன் மூலம் அவன் உதவி கிடைக்க வழி செய்கிறான். தந்தையிடம் பிசிராந்தையாரைக் கொல்லுமாறு வேண்டுகிறான். தந்தை போர் மேற்கொள்ளும்போது இவனும் தம்பியும் சிறுநரிகள் போல் ஆகின்றனர். புல்லாற்றூர் எயிற்றியனார், அறம் உரைத்த பின்னரே அரசன் அமைதி கொண்டு வடக்கிருந்தான். பின்னர் இவர்கள் மன்னிப்பு கேட்கின்றனர்.

இந்நாடகத்தில் வரும் கெட்டவர்களும் பின்னர் நல்லவர்களாக மாறுகின்றனர். வல்லவர்களாக இருந்தால் தான் வாழமுடியும் என்பதற்கு இந்நாடகம் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

**முடிவுரை**

நட்பே உயிரை விட மேலானது. மிக நெருங்கிப் பழகினால் தான் நட்புணர்வு தழைக்கும் என்பதைக் காட்டிலும், உணர்ச்சி ஒத்திருந்தாலே இருவரையும் நட்புடையவராக்கும்; அத்தகைய நட்பு கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பு. நட்புக்காக உயிரையும் நல்கிய நட்பு. இத்தகைய நட்பின் மேன்மையை வெளிப்படுத்தும் பிசிராந்தையார் நாடகத்தின் வளர்ச்சியில் துணைப் பாத்திரங்கள் பெரிதும் துணை புரிந்துள்ளன.

**துணை நூற்பட்டியல்**

1. பிச்சமுத்து ந. திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும், சக்தி வெளியீடு, சென்னை, 1986
2. சம்பத் குமார் பா., மு. வ. நாவல்களில் பாத்திரங்கள் – ஒரு திறனாய்வு, ராஜ் காந்தி பதிப்பகம், கோயம்புத்தூர், 1988
3. பிரகாசம் பு, தமிழ்வாணன் நாவல்களில் பாத்திரப்படைப்பு, ப.3
4. ஞானமூர்த்தி தா. ஏ., இலக்கியத் திறனாய்வியல், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1986
5. ஜெயசாந்தி ஜெ, ஆய்வு நோக்கில் திருதொண்டர் காப்பியம் முனைவர் பட்ட ஆய்வேடு சென்னைப் பல்கலைக் கழகம், 2011
6. பாவேந்தர் பாரதிதாசன், பிசிராந்தையார், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 2007